ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | ஆகஸ்டு 1996 | கானம் : 1

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 2 ஆகஸ்டு 1996 கானம் : 1

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 9 | 4 |
| 3. | ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும், உரையும்-2 | 6 |
| 4. | ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலிருந்து சில சுவாரஸ்யங்கள் | 12 |
| 5. | கணி கண்ணன் கதை - 2 | 14 |
| 6. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-12 | 23 |
| 7. | செய்திகள் | 32 |
| 8. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |

**Photographs**

Front Wrapper : **Sri Sridhar**
Back Wrapper : ] Devotees
Page two



சென்னை பெரம்பூர் 'அன்னதான சமாஜ'த்திற்கு ப்ரவசனம் செய்ய வரும்
ஸ்ரீ குருஜியை சமாஜத்தினர் வரவேற்கும் காட்சி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்:

ராகம் - சுப பந்துவராளி தாளம் : ஆதி

பல்லவி

*தரிசனம் தரலாகாதோ தயாநிதே*
*தரிசனம் தரலாகாதோ - கண்ணா*

அனு பல்லவி

*தனிமையில் உந்தன் நினைவிலே வாடும்*
*எந்தனுக்கு - நீ*

சரணம்

*உடல் பொருள் ஆவி உந்தனுக்கே உகந்தளித்தேன்*
*முரளீதரன் சொல் லட்சியமோ உந்தனுக்கு*

---

Front Wrapper :

சென்னை விழுப்புரம் அருகிலுள்ள வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்திராள் அதிஷ்டானத்தில் - ஏகாந்த நிலையில் - ஸ்ரீ குருஜி .

Back Wrapper :

மதுரா பிருந்தாவன யாத்திரையில் பக்தர்களுடன் ஸ்ரீ குருஜி.

# 9

ஸ்ரீ குருஜி இப்பொழுது இருக்கும் இடத்திற்கு முன்பாக ஒரு சிறிய Flat-ல் இருந்ததாக முன்பே எழுதியிருந்தேன் அல்லவா? அப்பொழுது நடந்த ஒரு ஸம்பவத்தை நினைவில் இருந்து எழுதுகின்றேன்.

உமா, உஷா என்ற இருவரும் ஸ்ரீ குருஜியிடம் பரிபூரணமான சரணாகதி செய்து விட்ட சகோதரிகள். இவர்கள் குடும்பமே ஸ்ரீ மஹா பெரியவாளிடம் முழுவதுமாக ஈடுபட்டு விட்ட ஒரு குடும்பம். இவர்கள் குடும்பத்தில் எல்லோருமே தீவிரமான சாதனைகளில் ஈடுபட்டு வருபவர்கள். ஸ்ரீ மஹா பெரியவாளிடம் ஈடுபாடு கொண்டுள்ள குடும்பம் என்பதாலே இந்த குடும்பத்தின் மேல் ஸ்ரீ குருஜிக்கு மிகவும் அன்பு உண்டு. இவர்களுடைய தாயாருக்கு தேவியும் ஸ்ரீ கிருஷ்ணனும் இஷ்ட தெய்வங்கள்.

ஒரு நாள் இவர்களது தாயார் தனது இஷ்ட தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணனிடம் அர்ச்சனை செய்து முடித்து விட்டு, பிரார்த்தனை செய்கையிலே கண்ணீர் விட்டு அழுது உருகி, நான் எவ்வளவு நாளாக உனக்கு பூஜை செய்து வருகின்றேன், எனக்கு இன்னும் உன்னுடைய அருள் செய்ய நேரம் வரவில்லையோ, எப்படியாவது உன்னுடைய அருள் எனக்கு உள்ளது என்பதை நீ ஏதாவது சூசகமாகவாவது தெரிவிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

அது சமயம் ஸ்ரீ மஹா பெரியவாளிடம் நெருங்கி கைங்கர்யம் செய்து வருபவர் ஒருவர் ஸ்ரீ குருஜியை பார்க்க வந்தார். வந்தவருக்கு ஆகாரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே, என்ன செய்வது என்று யோசித்த குருஜி, ஸ்ரீ பெரியவாளின் பக்தர்களை அவர்கள் வீட்டிற்கே இவரை அழைத்துச் செல்வோம், அவர்களும் மிகவும் சந்தோஷிப் பார்கள் என்று நினைத்து அழைத்துச் சென்றார். ஸ்ரீ குருஜி அவருடன் உள்ளே நுழையும் நேரம் தான் அவர்களின் தாயார் ஸ்ரீ கிருஷ்ணனிடம் பிரார்த்தனை செய்து விட்டு வரும் சமயம். ஸ்ரீ குருஜியைப் பார்த்தவுடன் அதுவும் பெரியவாளுக்கு அந்தரங்கமான கைங்கர்யம் செய்யும் ஒருவரை உடன் அழைத்துக் கொண்டு ஆகாரத்திற்கு வந்தவுடன் சந்தோஷம் தாங்கவில்லை. தன்னுடைய பிரார்த்தனைக்குப் பதில் கிடைத்து விட்டது. இது தான் பகவான் தனக்குக் காட்டிக் கொடுத்த சூசகம் என்று சந்தோஷித்து அன்று இருவருக்கும் அமுது படைத்து ஆனந்தித்தார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

***கோவில்களில் புனருத்தாரணம் செய்யும் பலர் பெரிய ராஜ கோபுரம் அமைத்து, சலவைக் கற்கள் பதித்து, மிகவும் ஆடம்பரமாகவும் நவீனமாகவும் எல்லா வசதிகளும் அமைத்து கட்டுகின்றார்கள். இத்துடன் புனருத்தாரணம் முடிந்து விடவில்லை. விடாமல் பூஜையும், நாம கீர்த்தனமும் ஸத் ஸங்கமும், பகவத் குணங்களும் நடக்க ஏற்பாடு செய்வதே புனருத்தாரணத்தின் பூர்த்தியாகும்.***

- ஸ்ரீ குருஜி

# ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும், உரையும் - 2

*ப்ருங்காவலீ ச மகரந்த ரஸாநுவித்த-*
*ஜங்காரகீத நிநதைஸ் ஸஹ ஸேவநாய ।*
*நிர்யாத்யுபாந்த ஸரஸீ கமலோதரேப்ய:*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 10

பொழுது நன்கு புலர்ந்தமையின் தாமரை மலர் நன்கு மலர்ந்து விட்டன. இரவெல்லாம் குவிந்திருந்த அம்மலர்களுள் சிறைக்கிடந்து உன் ஸேவையை இழந்து வருந்திய வண்டினங்கள் இப்பொழுது வெளிவந்து சந்தோஷத்துடன் பாடிக் கொண்டு, உன்னைக் கண்டு வணங்க வந்திருக்கின்றன. எங்கும் நிறைந்தவனே! துயிலெழுந்து அவைகளின் ஆசையையும் நிறைவேற்றுக.

*யோஷாகணேந வரதத்நி விமத்யமாநே*
*கோஷாலயேஷு ததிமந்தந தீவ்ரகோஷா: ।*
*ரோஷாத்கலிம் விதததே ககுபஸ்ச கும்பா: ।*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 11

இடைச்சேரிகளில் உள்ள இளமங்கையர் கூட எழுந்திருந்து (காலைக் கடன்களை முடித்துக் கொண்டு) தயிர் கடைந்து கொண்டிருக்கின்றனர். அவ்வொலியும், அதனால் திக்குகளில் உண்டாகும் எதிரொலியும் நின் திருச்செவிகளில் விழவில்லையா? அருளுடன் துயிலெழ வேண்டும்.

குறிப்பு:- 'ஸந்தி' என்ற சொல் தொக்கி நிற்கின்றது. இச் சுலோகத்திற்கு வேறு வகையிலும் சிலர் பொருள் கூறுவர்.

*பத்மேச மித்ர சதபத்ர கதாலிவர்கா:*
*ஹர்த்தும் ச்ரியம் குவலயஸ்ய நிஜாங்கலக்ஷ்ம்யா ।*
*பேரீ நிநாத மிவ பிப்ரதி தீவ்ர நாதம்*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 12

எம்பெருமானே! உன் நிறத்திற்கு வண்டினங்கள் உவமையாவது போல் குவளை மலர்களும் உவமையாகின்றன. இதைப் பொறாது இவ் வண்டினங்கள் மலர்களின் கறு நிறத்தினும் தம் நிறம் மேன்மையானது என்பதை உலகிற்குப் பறையறைந்து அறிவிப்பன போல் ரீங்காரம் செய்கின்றன. உன்னைச் சேர்ந்தவர்களுள் எழும் இவ்விரோத உணர்ச்சியை விலக்குவதற்காகவாவது நீ விரைந்து துயிலெழுக.

*ஸ்ரீமந் நபீஷ்டவராதகி லோக பந்தோ*
*ஸ்ரீஸ்ரீநிவாஸ ஜகதேக தயைக ஸிந்தோ ।*
*ஸ்ரீதேவதா க்ருஹ புஜாந்தர திவ்ய மூர்த்தே*
*ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 13

அனைவருக்கும் அனைத்துறவுமாகி நின்று அவர்கள் கேட்கும் பயன்களை அளித்து நல்வழிப்படுத்தும் கருணைக் கடலே! அருளே உருவெடுத்தவன் போன்ற அலர் மேல் மங்கை இமைப் பொழுதும் பிரியாது உறைகின்ற திரு மார்பை உடையவனே! பரம பதத்தினின்றும் இப் பரம பதத்திற்கு நீ எழுந்தருளிய காரியத்தை நோக்கி விரைவில் துயிலெழுவாயாக.

*ஸ்ரீ ஸ்வாமி புஷ்கரிணிகாப்லவ நிர்மலாங்கா:*
*ச்ரயோஉர்த்திநோ ஹரவிரிஞ்ச ஸநந்தநாத்யா: ।*
*த்வாரே வஸந்தி வரவேத்ர ஹதோத்தமாங்கா:*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 14

பெரும் பதவிகளிலிருக்கும் அயன் அரன் முதலியோரும் உன் முழு அருளை அடைய விரும்பி ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி உள்ளும் புறமும் தூய்மை பெற்று உன் ஸேவைக்காக உன் திருக்கோயில் முன்னிலையில் நெருங்கி நிற்கின்றனர். அவர்களுக்கு இரங்கி நீ விரைந்து துயிலெழுவாயாக.

குறிப்பு :- ஸ்வாமி புஷ்கரிணி: கோயிலுக்கு இடது புறத்தில் (வடக்கில்) உள்ள திருக்குளம். நீராடித் தூய்மை பெற்ற பிறகே எத்தகையோரும் கோயிலுக்குள் செல்ல வேண்டும்.

*ஸ்ரீ சேஷசைல கருடாசல வேங்கடாத்ரி-*
*நாராயணாத்ரி வ்ருஷபாத்ரி வ்ருஷாத்ரி முக்யாம் ।*
*ஆக்யாம் த்வதீய வஸதேரநிசம் வதந்தி*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 15

பரம பதத்தினின்றும் நீ விரும்பி எழுந்தருளியிருக்கும் இத் திருமலையின் பெருமையை அதற்குள்ள ஏழு பெயர்களாலும் சொல்லிக் கொண்டு, அரன் முதலியவர்கள் உன் திருக்கோயிலின் வாயிலில் நிற்கின்றனர். துயிலெழுந்து அருள் புரிவாயாக.

குறிப்பு:- சுலோகத்தில் கூறியுள்ள ஆறு பெயர்களுடன் சிம்ஹாசலம் என்பதையும் சேர்த்து ஏழு மலைகளின் பெயர்களை அறிந்து கொள்க.

*ஸேவாபரா: சிவ ஸுரேச க்ருசாநு தர்ம-*
*ரக்ஷோம்பு நாத பவமாந தநாதிநாதா: ।*
*பத்தாஞ்சலி ப்ரவிலஸந் நிஜ சீர்ஷ தேசா:*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 16

திக்பாலகர்கள் எண்மரும் தொண்டு செய்வதற்காகக் கைகளைக் கூப்பித் தொழுது கொண்டு காத்திருக்கின்றனர். நீ துயிலெழுந்து அவரவர் செய்ய வேண்டிய பணிகளைக் கட்டளையிட்டருளுக.

*தாடீஷு தே விஹகராஜ ம்ருகாதிராஜ-*
*நாகாதிராஜ கஜராஜ ஹயாதிராஜா: ।*
*ஸ்வஸ்வாதிகார மஹிமாதிக மர்த்தயந்தே*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 17

திருவேங்கடநாதனே! நீ வெளியில் எழுந்தருளும் பொழுது கருட கதி, ஸிம்ம கதி, ஸர்ப்ப கதி, கஜ கதி, அச்வ கதி என்று சிறப்பித்துக் கூறப்படும் உன் அழகிய நடைகளின் மேன்மையைக்கண்டு கருடன் முதலானோர் ஐவரும், தற்பொழுது அவ்வகை நடை நடத்தலிலுள்ள தங்கள் தகுதியின் குறையை யுணர்ந்து அதிகமான தகுதியைப்பெற விரும்பி உன்

திருக்கோயில் வாயிலில் காத்திருக்கின்றனர். நீ துயிலெழுந்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றியருள வேண்டும்.


குறிப்பு:- விஹக ராஜன் - பக்ஷிகள் தலைவன். ம்ருக அதிராஜன் - விலங்குகளுக்கு அரசன். இவ்வாறே மற்றவை. தாக்ஷ என்ற பதத்திற்கு யுத்த யாத்திரை என்ற (முதலில் தோன்றக் கூடிய) அர்த்தத்தைக் கூறிக் கருடன் முதலியவர்கள் நீ செய்யும் யுத்த யாத்திரையில் தங்களுக்கு அதிக பாகம் வேண்டுமென்று கோருகின்றனர் என்று பலர் இச் சுலோகத்திற்குப் பொருள் கூறுகின்றனர்.

*ஸூர்யேந்து பௌம புத வாக்பதி காவ்ய ஸௌரி*
*ஸ்வர்பாநு கேது திவிஷத்பரிஷத்ப்ரதாநா: ।*
*த்வத் தாஸ தாஸ சரமாவதி தாஸ தாஸா:*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 18

தேவர்களிடத்தும் தங்கள் வன்மையைக் காண்பிக்க வல்ல நவக்கிரஹங்கள் உன் அடியார் திறத்தில் அவ்வாறிராததோடு அவர்களுக்குத் தொண்டும் செய்து ஆவலாய் உன் திருவருளைப் பெற விரும்பி வந்து காத்து நிற்கின்றனர். நீ துயிலெழுந்து அவர்களுக்கு அருளுக.

*த்வத் பாத தூளி பரித ஸ்புரிதோத்தமாங்கா:*
*ஸ்வர்காபவர்க நிரபேக்ஷ நிஜாந்தரங்கா:।*
*கல்பாகமாகலநயாலுலுகுலதாம் லபந்தே*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 19

சூரியன் முதலிய நவ க்ரஹங்கள் அதிகார புருஷர்கள். இப்பொழுதே மோக்ஷம் அடையவேண்டு மென்றிருந்தாலும் பொறுப்பை விட்டுப்போக இயலாதவர்கள். அத்தகைய அவர்கள் இங்கு வந்து உன் அடியார்களுக்குத் தொண்டு செய்து வாயிலின் முன்பு உன் அருளைப்பெற்று உன் திருவடித் தூள்களைத் தங்கள் தலையில் பெய்து கொண்டு அவ்வானந்தத்தில் சுவர்க்கமும் வேண்டாம் மோக்ஷமும் வேண்டாம் என்று கூறி நிற்கின்றனர். வேறு கல்பங்கள் வந்துவிட்டால் தாங்கள்



இவ்வாறு இங்கிருந்து களிக்க இயலாது போகுமே யென்று வருந்தவும் செய்கின்றன. நீ துயிலெழுந்து அவர்களுக்கு அருளுக.

*த்வத்கோபுராக்ரசிகராணி நிரீக்ஷமாணா:*
*ஸ்வர்காபவர்க பதவீம் பரமாம் ச்ரயந்த: ।*
*மர்த்யா மநுஷ்யபுவநே மதிமாச்ரயந்தே*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 20

யஜ்ஞயாகாதிகள் செய்து சுவர்க்கம் செல்லும் மனிதர்களும், இவ்வுலகத்தை வெறுத்து, பக்தி, ப்ரபத்திகளில் ஒன்றைச் செய்து மோக்ஷம் செல்லும் மனிதர்களும், தாங்கள் செல்லும் வழியின் கோடியை அடைந்து பாக்ய விசேஷத்தால் உன் கோபுரங்களைத் தற்செயலாய்த் திரும்பிப் பார்க்க நேருமாயின் பாடுபட்டுச் சம்பாதித்த அவ்வுலகங்களை விட்டு உன் ஸேவைக்காக மனுஷ்ய உலகத்திற்கே திரும்பி வர முடிவு செய்கின்றனர். ஸ்ரீநிவாஸா ! நீ துயிலெழுந்து அவ்வாறு திரும்பி வந்தவருக்கு அருளுக.

குறிப்பு:- மேலுலகத்தில் சென்று உத்தம பதங்களை அடைந்தவரும் உன்னை ஸேவிக்க விரும்பி மனுஷ்ய லோகத்திற்கு மறுபடியும் வந்து விடுகின்றனர் என்றும் பலர் பொருள் கூறுகின்றனர்.

*ஸ்ரீ பூமிநாயக தயாதிகுணாம்ருதாப்தே*
*தேவாதிதேவ ஜகதேக சரண்யமூர்த்தே ।*
*ஸ்ரீமத் நநந்த கருடாதி பிரார்ச்சிதாங்க்ரே*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் ॥* 21

அனந்தன், கருடன் முதலிய நித்ய ஸூரிகள் உன் அருளை நோக்கிக் கோயில் வாயிலில் நின்று கொண்டிருக்கின்றனர். அருட்கடலாகிய நீ உன் மஹிஷிகளுடன் எழுந்து வந்து அருள் புரியவேண்டும்.

(தொடரும்)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலிருந்து சில சுவாரஸ்யங்கள்

* யத்ருச்சையாக என்ற பதம் 20 இடங்களில் வருகின்றது

* ஸ்ரீ ராமர் வனவாசம் வரும் காலத்தில் தெற்கு நோக்கி வரவேண்டிய அவசியம் யாது எனில், வடக்கே ஜனகபுரி, மாமனாரின் ராஜ்யமாக இருப்பதால் சிரம தசையில் அங்கு செல்வது உசிதம் அல்ல. அங்க தேசம், கலிங்க தேசம் போன்றவைகள் ஜனகருடைய ஸ்நேகமான ராஜ்யமாக இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து கொண்டு பரதனை எதிர்ப்பார்களோ என்று கைகேயி பயப்படக்கூடும். கிழக்குப் பக்கமாக போவதற்கில்லை. ஆகவேதான் தெற்கு நோக்கி வரவேண்டியிருந்தது.

* ஸ்ரீ ராமர் காட்டிற்கு செல்லும் பொழுது வயது 32, சீதா பிராட்டிக்கு வயது 24.

* தசரத மஹாராஜாவின் திருமணத்தின் பொழுது தசரதர் வயது 18. கௌசல்யா தேவியின் வயது 24, அக்காலத்தில் மஹாராஜாக்கள் ஸ்வயம்வரம் மூலமாகவே விவாஹம் செய்து கொண்டதே இதற்குக் காரணம்.

* அயோத்தியைவிட கோசல தேசம் பெரியது.

* தசரதர் நேரிடையாக ஸ்ரீ ராமரை காட்டிற்குப் போகச் சொல்ல அவருடைய ஹ்ருதயம் இடம் கொடுக்கவில்லை. பித்ரு சப்தத்திலேயே மாதாவும் அடங்கிவிட்டதால் கைகேயி சொல்படி நடப்பதும், பித்ரு வாக்ய பரிபாலனம் தான்.

* சீதை ராமருடன் தனிமையில் பேசும் பொழுது கூட மற்ற சதிபதிகள் போல் இல்லாமல் தர்ம விஷயமாகவே பேசுவதாக உள்ளது.

* ஸ்ரீ ஹனுமார் 5 இடங்களில் சமய சஞ்சீவியாக (ஆபத்தில் கைகொடுப்பவராக) இருந்து உள்ளார்.

* ராமர் குகனுக்கும், லவனுக்கும் பிரித்துக் கொடுத்ததில் லவபுரம் என்பதுதான் இப்பொழுது பாகிஸ்தானில் இருக்கும் லாகூர்.

* ராமர் சீதையைப் பிரிந்து சேருவதற்கான காலம் சுமார் பத்து மாதங்களே. லக்ஷ்மணனும் தன்னுடைய மனைவியைப் பிரிந்து அண்ணாவுடைய கைங்கர்யத்திலேயே இருந்து விட்டான். பரதன் தான், ராஜ்யம் இருந்தும், மனைவி பக்கத்தில் இருந்தும், வேலையாட்கள் இருந்தும் 14 வருடங்கள் ஸர்வத்தையும் துறந்து தபஸ் செய்தான். ஆகவே எல்லா வற்றையும்விட பரதனுடைய தபஸே சிரேஷ்டமானது.

* வசிஷ்டர் தசரத மஹாராஜாவிடம் புத்ர காமேஷ்டி யாகத்தை ரிஷ்ய சிருங்கரைக் கொண்டு நடத்தி கொள்ளலாம், அதற்கு முன்பு அச்வமேத யாகத்தை நான் நடத்தி வைக்கின்றேன் என்று கூறுகின்றார். இதிலிருந்து என்ன தெரிய வருகின்றது என்றால் தமக்குத் தெரியாத காரியத்தைத் தெரிவதாக ஒப்புக் கொண்டு செய்வது தவறு என்றும், அந்த அந்த கார்யத்தை அதற்குத் தகுந்த அதிகாரிகளைக் கொண்டு நடத்தினால் தான் பலிதம் ஏற்படும் என்றும் தெரிகின்றது.

* ராம ராஜ்யத்தில் மூன்று தவறுகள் நடந்தன. அவைகூட பாதுகா ராஜ்யத்தில் நடக்கவில்லை. ராம ராஜ்யத்தைக் காட்டிலும் பாதுகா ராஜ்யம் சிரேஷ்டம்.

* ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் மூவரும் முறையே தமோ குண, ஸத்வ குண பூர்ணர்கள். தபஸ் ஸித்தியான ராவணன், ஜபத்தையும், கும்பகர்ணன் தூக்கத்தையும் கேட்டார்கள். விபீஷணன் மட்டும் ஆபத்து காலத்திலும் தர்மத்தை விட்டு வழுவாத புத்தி வேண்டும் என்று கேட்டான். ஆகவே தான் ஸ்ரீ ராமருடைய சரணத்தை வந்தடைந்தான்.

**– நமது ஸத் ஸங்கத்தில் ஸ்ரீ உ.வே. ஸ்ரீவத்ஸாங்கச்சார்யார் நிகழ்த்திய உரையிலிருந்து.**

# கணி கண்ணன் கதை - 2

இந்த விதமான அமைப்பில் (posture-இல்) என்ன விசேஷமென்றால், நம் பார்வையில் அவருடைய திருமேனிக்கு மறுபுறம் இருக்கும் வலது கையை அவர் நன்றாகத் தூக்கி அபயம் ஸாதித்தாலும் அது நமக்கும் பிம்பத்துக்கும் குறுக்கே வந்து மறைக்காது. வலது கை திருமேனிக்கு மறு பக்கம் போய், பிம்பத்தின் அந்த மறுபக்கம் பின் சுவரை ஒட்டினாற்போலப் போய் விடுவதால், அந்தக் கையைத் தூக்கி வைத்து சில்பம் பண்ணுவதிலும் சிரமம் இல்லை. இந்தக் காரணங்களால், முன்னே சொன்ன சயன மூர்த்திகளுக்கெல்லாம் வித்யாஸமாக, விசேஷமுள்ள வித்யாஸமாக, இந்த யதோக்தகாரி நமக்கெல்லாம் நன்றாக வலது கையை உயர்த்தி அபயம் ஸாதித்தபடி சயனித்துக் கொண்டிருக்கிறார்!

அவருக்கு (யதோத்காரி என்ற) அந்தப் பெயர் வருவதற்கு முற்பட்ட காலத்திலேயே திருமழிசையாழ்வார் அவரை இஷ்ட மூர்த்தியாக உபாஸித்துக் கொண்டிருந்தார். அவருக்கு அத்யந்த சிஷ்யனாக ஒரு பையன் - கணி கண்ணன் என்று பெயர். அவன் பிறந்ததே ஆழ்வார் அநுக்ரஹத்தில்தான். அவனுடைய பெற்றோருக்கு ரொம்ப காலமாக ஸந்ததியில்லை. அவர்கள் நித்யம் ஆழ்வாருக்குப் பால் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். யோக நிஷ்டையிலேயே போய்க்கொண்டிருந்த ஆழ்வார் எப்போதாவதுதான் கண்ணைத் திறப்பார். எதுவும் ஆஹாரம் பண்ணுவதில்லை. இந்தப் பாலை மட்டும்தான் கொஞ்சம் அருந்திவிட்டு பாக்கியை அவர்களுக்கே கொடுத்து விடுவார். ப்ரஸாதமாக அவர்கள் அதை அருந்துவார்கள். அதன் பலனாகத்தான் அவர்களுக்குப் புத்திரன் பிறந்தான்.

கணி கண்ணன் என்ற அந்தப் பிள்ளை, குழந்தை நாளிலிருந்தே ஆழ்வாரிடம் வந்து அந்தரங்க சிஷ்யனாகி விட்டான்.

ஒரு நாள் அவன் கோவிலுக்குப் போகும்போது அங்கே ஒரு தொண்டு கிழவி, முதுகு நன்றாகக் கூனிப் போனவள்

எலும்பும் தோலுமாக ரொம்பவும் சிரமப்பட்டுக் கொண்டு பெருக்கி, மெழுகி, கோலம் போட்டுக் கைங்கர்யம் செய்வதைப் பார்த்தான். உடம்பு கொஞ்சங்கூட முடியாவிட்டாலும், மூச்சு போகும் வரையில் பகவத் கைங்கர்யம் பண்ணாமலிருப்ப தில்லை என்ற த்ருடமான பக்தியிலேயே அவள் தொண்டு புரிவது தெரிந்தது. கணி கண்ணனுக்கு அப்படியே மனசு உருகிவிட்டது. 'ஐயோ, இவருக்கு நாம் உபகாரம் பண்ண வேண்டாமா? எப்படிப் பண்ணுவது? என்ற மனஸார நினைத்தான்.

இந்த மாதிரிப் பெரிசாக ஒரு காருண்ய சிந்தனை வந்தால் அப்போது, தன்னால், குருவுடைய அநுக்ரஹ சக்தி சிஷ்யனுக்குள் ஆவிர்பவித்துவிடும். ஈச்வரனிடமிருந்து குரு பெற்றிருக்கின்ற சக்தியை குருவிடமிருந்து சிஷ்யனும் பெற்றுவிடுவான். அந்த விதத்தில் ஆழ்வாரின் அநுக்ரஹ சக்தி அந்த நிமிடத்தில் கணி கண்ணனுக்கே வந்துவிட்டது.

தன்னை மறந்த நிலையில் அந்தக் கிழவியிடம் போய் அன்போடு அவள் முதுகைத் தடவிக் கொடுத்தான். உடனே, அநுக்ரஹ சக்தியினால் அவளுடைய கூன் முதுகு நேராக நிமிர்ந்தது. அது மட்டுமில்லை. எலும்பும் தோலுமாக, விருத்த தசையிலிருந்த கிழவி அந்த க்ஷணத்திலேயே நல்ல ஆரோக்ய முள்ள யுவதியாக மாறிவிட்டாள்.

மதுராபுரியில் - வட மதுரை என்பதில் - க்ருஷ்ண பரமாத்மா குப்ஜை (கூனி)க்கு இதே போன்ற அநுக்ரஹம்தான் பண்ணினார். அது ஸப்த மோக்ஷ புரிகளில் ஒன்று. காஞ்சிதான் அந்த மோக்ஷ புரிகளுக்குள் தக்ஷிண தேசத்தில் இருக்கப்பட்ட ஒரே ஒரு க்ஷேத்ரம். வடக்கே பகவான் பண்ணின அற்புதமான அருளை தெற்கே அவனுடைய அடியார்க்கடியானே பண்ணி விட்டான். ஆழ்வார் பகவானுடைய அடியார். கணி கண்ணன் ஆழ்வாருக்கு அடியார்.

'கூன் பாண்டியன்' என்றே சொல்லப்பட்டவனைத் திரு ஞான சம்பந்தர் 'நின்ற சீர் நெடுமாறன்' என்பவனாக நிமிர்த்திய கதையும் நினைவு வருகிறது.



கணி கண்ணன் குமரியாக்கிய கிழவி யாரென்றால் கிழவியாவதற்கு முந்திக் காஞ்சிரபுரத்து ராஜாவின் ஸபையில் தாஸியாக இருந்தவள். பிற்பாடு நிஜமாகவே 'தேவதாஸி'யாகி ஸ்வாமியின் கைங்கர்யத்தில் ஈடுபட்டவள். அடடா, இந்த பாகவதோத்தமருடைய அநுக்ரஹத்தால் இப்படி நல்ல பலம் வந்துவிட்டதே! இதை வைத்துக் கொண்டு பெருமாள் ஸேவையிலேயே ஸதா காலமும் இருந்துவிடவேண்டும்' என்று யுவதியான பின்பும் அவள் தீர்மானம் பண்ணிக்கொண்டு அப்படி செய்ய ஆரம்பித்தாள்.

கிழவி குமரியானால் ஊர் உலகமெல்லாம் ஆச்சர்யப் படாதா? எங்கேயும் அதே பேச்சாகத் தானே இருக்கும்? காஞ்சீபுரத்தில் இருந்து கொண்டு ஆட்சி நடத்திய பல்லவ ராஜாவின் அரண்மனைக்குச் சேதி போயிற்று. ராஜாவும் அப்போது வ்ருத்தாப்ய தசையில் இருந்தான். தனக்குப் ப்ரியமாக இருந்தவள் குமரியாகி விட்டாள் என்றதும் அவனுக்குத் தகாத சபலம் ஏற்பட்டது.

கணி கண்ணனை வரவழைத்து, "என்னையும் இளமையாகப் பண்ணப்பா!" என்றான். கணி கண்ணன் பரிஹாசமாகச் சிரித்தான். குருவே ஸகலமும், அவரே சரணம் என்று இருந்த அவனுக்கு ராஜா, ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. யாராயிருந்தாலும் தான் கொஞ்சங்கூட பயப்படாமல், பவ்யப் படாமல் தர்மப்படி நடக்கணும், அவர்களுக்கும் தர்மத்தைச் சொல்லனும் என்ற தீரம் அவனுக்கு இருந்தது.

ராஜாவைப் பார்த்து, "நானா அந்தக் கிழவியைக் குமரி ஆக்கினேன்? எனக்கு ஏது அந்த சக்தி? என்னுடைய குரு நாதருடைய சக்திதான் எனக்குள் புகுந்து கொண்டு அப்படி செய்வித்தது என்றான்.

அப்படியானால் அந்த குருவையே தான் அழைத்துக் கொண்டு வாயேன்" என்று ராஜா சொன்னான்.

"அவரைப் பற்றி உனக்கு தெரியாதா? நீ ராஜாவா யிருந்தும் உன்னைப் பார்க்க அவர் இத்தனை காலமாக

வராததிலிருந்தே அவரைப் பற்றி நீ தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே! அவருக்கு பகவானைத் தவிர எவரிடமும் போய் ஒன்றும் ஆகவேண்டியதில்லை. பகவானையே நினைக்கிறவர்கள், பகவத் கைங்கர்யத்துக்கே ஆசைப்படுபவர்கள் ரொம்பவும் கஷ்டப்படும் போது அவர்கள் யாரானாலும் அவர்களிடம் அவருக்கு ஸ்வபாவமாகக் கருணை உண்டாகி அநுக்ரஹம் செய்து, கஷ்டத்தை நிவர்த்தி செய்து விடுவார். அவர்கள் போய் அவரிடம் சொல்ல வேண்டுமென்பதில்லை. அவரும் தாமே அவர்களிடம் போய் அநுக்ரஹம் பண்ணவேண்டுமென்பதில்லை. ஏதோ ஒரு கருவி மூலம் அநுக்ரஹம் பண்ணிவிடுவார். அந்த கிழவிக்கு அப்படித்தான் நடந்தது. அவள் தன்னுடைய சொந்த சரீர அநு போகங்களுக்காக யௌவனம் பெறவேண்டுமென நினைக்கவில்லை. பகவானுக்கு சரீர கைங்கர்யம் நன்றாகச் செய்ய வேண்டுமென்பதொன்றே அவள் நினைவாயிருந்தது. அதனாலே என் குருவுக்கு தயை பொங்கிக் கொண்டு வந்தது. ப்ரக்ருதி (இயற்கை) நியதியையும் மாற்றினால் கூடப் பரவாயில்லை என்று அவளை யுவதியாக்கினார்.

''நீயோ சரீர போகங்களை அநுபவிக்கவேண்டும் என்ற ஆசையிலேயே யௌவனத்தைக் கேட்கிறாய். இதற்கு அவர் ஒரு நாளும் ஒப்புக் கொண்டு அநுக்ரஹிக்க மாட்டார். யாரானாலும் ப்ரக்ருதி நியதிப்படி ஜராமரணங்கள் நேர வேண்டியபோது நேரத்தான் செய்யும். நீ போனால் வேறே எவனோ ஒருத்தன் ராஜாவாக வந்து ராஜ்ய பரிபாலனம் பண்ணிவிட்டுப் போகிறான். உனக்கு முந்தி எத்தனையோ பேர் ஆட்சி நடத்தி விட்டு அப்புறம் கிழடு தட்டி, 'போய்த்தானே' இருக்கிறார்கள்? ஒரு விதமான விசேஷ காரணமுமில்லாமல் உன்னை இளமையாக்குவதற்கு என் குருநாதர் ஸம்மதிக்கவே மாட்டார்'' என்று பல்லவ ராஜாவிடம் கொஞ்சங்கூட ஒளிவு மறைவில்லாமல் கணி கண்ணன் துணிச்சலாகச் சொன்னான்.

ராஜஸ குணமே கொண்ட ராஜாவுக்கு கோபம் வந்து விட்டது. ''உன்னை இந்த ஊரை விட்டே ப்ரஷ்டம் பண்ணுகிறேன்'' என்று ஆஜ்ஞை பண்ணினான்.

''நானே இப்படிப்பட்ட ராஜா இருக்கிற ஊரில் இருக்கிற தில்லை என்று தானப்பா தீர்மானம் பண்ணிக் கொண்டிருக் கிறேன்!'' என்று கணி கண்ணனும் சொல்லிவிட்டு நேரே கோவிலுக்கு, ஆழ்வாரிடம், வந்தான்.

அரண்மனையில் நடந்ததையெல்லாம் அவரிடம் சொல்லி விட்டு ஊரை விட்டுப் புறப்பட்டான்.

## சொன்ன வண்ணம் செய்தது

பக்தர், யோகி ஆனாலும் ஆழ்வாருக்கும் சுத்தமான ப்ரேமையினாலே இரண்டு பாசங்கள் மட்டும் இருந்தன போலிருக்கிறது. சிஷ்யன் கணி கண்ணனை விட்டுப் பிரிய முடியாத பாசம் அவருக்கு இருந்தது. அதே போல அந்த ஆலய மூர்த்தியாக *அர்ச்சாவதாரத்திலிருந்த புஜங்க சயனப் பெருமாளிடமும் அவருக்கு அலாதியான பாசமிருந்தது.

அதனால் கணி கண்ணனின் பின்னோடேயே அவரும் புறப்பட்டு விட்டார். அவன் அவரைக் கூப்பிடவில்லை. ''தான் எங்கேயாவது காடு, மலை என்று போய்விடலாம். குருவையும் அங்கே எல்லாம் இழுக்கடித்து சிரமப்படுத்தவேண்டாம். இங்கேயே அவர் பாட்டுக்குப் பெருமாள் சந்நதியில் இருந்து கொண்டிருக்கட்டும். அவர் எங்கே இருந்தாலும் நாம் எங்கே இருந்தாலும் அவருடைய அருள் நம்மைக் கட்டிக் காக்கும். சரீர ரீதியில் எங்கே இருந்தாலும் நம்முடைய ஹ்ருதயத்தில் அவர் எப்போதும் இருந்து கொண்டுதானிருப்பார்''- என்ற தெளிவோடு கணி கண்ணன் புறப்பட்டு விட்டான்.

ஆனாலும் அவருக்கு அப்படி இருக்க முடியவில்லை. ஸ்வய நலம் கலக்காத வாத்ஸல்யங்களில் இருக்கிற அழகு உலகுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக மிகவும் பெரிய

---

*அர்ச்சை என்றால் விக்ரஹம். ராம, க்ருஷ்ணாதியராக அவதரித்து ஸஞ்சாரம் செய்த இறைவனே ஸஞ்சரிக்காமல் ஓரிடத்தில் இருந்து கொண்டு அருள்வதற்காக அர்ச்சையாக அவதரிக்கிறான் என்பது ஆன்றோர் கருத்து.*

வர்கள்கூட பந்த பாசமிருக்கிறது போல இருப்பதுண்டு. அநேக, கதை புராணங்களில் இப்படி பார்க்கிறோம்.

கணி கண்ணனின் பின்னாலேயே புறப்பட்ட ஆழ்வார் அந்த மாதிரியே பாசத்துடன் பெருமாளும் தன் பின்னாடி தொடர்ந்து வருவாரென்று நினைத்துக் கொண்டு ஆலயத்தில் இருக்கப்பட்ட தம்முடைய அபிமான மூர்த்தியைப் பார்த்தார்.

ஆனால், ஸ்வாமி லீலா விநோதனல்லவா? அதனால் அவன் பாட்டுக்கு நிம்மதியாக சேஷ பர்யங்கத்தில் படுத்துக் கொண்டு இருந்தான்.

அப்போதுதான் இந்தக் கதை ஆரம்பத்தில் நான் சொன்னாற்போல சிஷ்யனுக்காக குருவானவர் ஸ்வாதீனத்துடன் ஸ்வாமிக்கே ஆர்டர் போட்டார்.

தான் பரம பாகவதன் இந்த அர்ச்சையிடமே அபிமானம் வைத்தவன், ஆனபடியால் தன்னை பகவான் பின் தொடர்ந்து வரவேண்டும் என்று தற்பெருமையாக ஆழ்வார் ஆர்டர் போடவில்லை. பின்னே, என்ன போட்டார்?

*''கணி கண்ணன் போகின்றான்....''*

தான் போவதைச் சொல்லிக் கொள்ளவில்லை. சிஷ்யன் போகிறானே, ஊரை விட்டுக் கிளம்பி விட்டானே, அதையே சொல்கிறார். ''குழந்தை ஊரைவிட்டு, மனஸு வெறுத்துப் போகிறது. அதன் கூடவே நீ ஸதா காலமும் இருந்து ரக்ஷிக்க வேண்டாமா?''

ஆழ்வார் ஸதாவும் தன்னை ரக்ஷிக்கிறார், ரக்ஷிப்பாரென்ற உறுதி கணி கண்ணனுக்கு இருந்தாலும், அவர் தாம் ரக்ஷிப்பதாக நினைக்கவில்லை. வெளியிலே தடபுடலாக பகவானுக்கு உத்தரவு போட்டாலும், உள்ளுக்குள்ளே ரக்ஷணமெல்லாம் அவனால்தான் நடக்கிறது, தாம் ஒன்றுமே இல்லை என்ற எளிமையோடுதான் இருந்திருக்கிறார். அதனால்தான் கணி கண்ணன் போகிறபோது பேசாமல் படுத்துக் கொண்டிருக்கிற ஸ்வாமியிடம் இப்படிக் கேட்கிறார்.

''குழந்தையோடு நீயும் போகாமல் ஜம்மென்று பாம்பு மெத்தையில் படுத்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி நீள நெடுகப் படுத்துக்கிடக்காதீர்! இது கொஞ்சங்கூட நன்றாயில்லை'' (என்கிறார்)

*''கணி கண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி*
*மணி வண்ணா! நீ கிடக்க வேண்டா!''*

''இப்படிப் படுத்துக் கொண்டு கிடக்காதே. நான் தைரியமாக துணிச்சலோடு உள்ளது, உள்ளபடி சொல்கிறவன். ஸத்யத்தின் சிவப்பேறிய நாக்கோடு உள்ளது உள்ளபடி பாடுகிற கவி.''

*''துணிவொன்றிச் செந்நாப் புலவோன் யான்''*

என்று சொல்லிக் கொள்கிறார். ''நான் பயப்படாமல் வாய் சிவக்க ஸத்யத்தையே பாடுபவன்'' என்று சொல்வதிலேயே ''நீ பொறுப்பில்லாமல் படுத்துக் கொண்டிருந்தால் அதை உள்ளபடி உலகத்துக்குத் தமுக்குப் போட்டு விடுவேன்!'' என்று எச்சரிக்கிற மாதிரி பாட்டு போகிறது.

*''கணி கண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி*
*மணி வண்ணா! நீ கிடக்க வேண்டா! துணிவொன்றிச்*
*செந்நாப் புலவோன் யான் செல்கின்றேன்...*

''குழந்தை போகிறான். மனசு தாளாமல் நானும் போகிறேன். நீ மட்டும் ஸுகமாகப் படுத்துக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? (குரலை உயர்த்தி) கிளம்பு, வாரிச் சுருட்டிக் கொண்டு, பெரிதாக சேஷ பர்யங்கம் விரித்துக் கொண்டு இருக்கிறாயே, அதைச் சுருட்டிக்கொண்டு நீயும் எங்களோடு புறப்படு.

*''நீயும் உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்!''*

-அழுத்தமான ஆர்டராகவே போடுகிறார்.

*''கணி கண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி*
*மணி வண்ணா! நீ கிடக்க வேண்டா! - துணிவொன்றிச்*

*செந்நாப் புலவோன் யான் செல்கின்றேன், நீயுமுன்றன்*
*பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்!*

பகவான் சயனித்துக் கொண்டிருக்கிறபோது ஆதிசேஷன் அவருக்குப் படுக்கை. அவரே எங்கேயாவது போகின்றா ரென்றால் அப்போது அவன் அவருக்கு ஆயிரம் தலையாலும் குடை பிடித்துக் கொண்டுப் போவான்.

*சென்றால் குடையாம்**

க்ருஷ்ணாவதாரம் ஆனவுடன் வஸுதேவர் குழந்தையை மழை வெள்ளத்தில் தூக்கிக்கொண்டு போகும்போது ஆதிசேஷனேதான் குடைபிடித்தான்.

ஆர்டர் போடுகிறபோதும் ஸ்வாமியிடம் ஆழ்வாரின் கரிசனம் குறையவில்லை ''பாம்பு மெத்தையிலிருந்து இறங்கி நீ வா என்று மட்டும் சொல்லாமல், ஸ்வாமிக்கு வெயில் படாமல், மழை படாமல் குடை வேண்டுமே' என்ற கரிசனத்தில் சேஷ சயனத்தையும் சுருட்டிக்கூட எடுத்துக்கொண்டே புறப்படச் சொல்கிறார்.

ஆர்டர் போட்டாரோ இல்லையோ, பெருமாளும் அப்படியே பண்ணிவிட்டார்! அதற்கு மேல் விளையாட்டுப் பார்த்து பக்தர் மனஸு வருத்தப்படும்படி பண்ணக்கூடாதென்று, அவர் சொன்னபடியே வாரிச் சுருட்டிக்கொண்டு கணி கண்ணனோடும் ஆழ்வாரோடும் தானும் புறப்பட்டு விட்டார்!

'சொன்ன வண்ணம் செய்தது' இதோடு முடியவில்லை.

(தொடரும்)

*பொய்கையாழ்வாரின் திருவந்தாதி, 53.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 12

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

*அருணாசலமென வகமே நினைப்பவரகத்தை*
*வேரறுப்பா யருணாசலா - 2*

ஆத்ம சாட்சாத்காரம், ஜீவன் முக்தி, கைவல்யம், மனோநாசம் எல்லாம் ஒன்றுதான். இவை அனைத்தின் லட்சியமும் மனதை அடக்கி நாசமாக்குவதே. தூக்கத்தில் மனது ஒடுங்குகிறது. அதனால் வாசனைகளும் ஒடுங்குகின்றன. மனது லயமாவதால்தான் தூக்கத்தில் ஒரு ஆனந்தம் ஏற்படுகின்றது. தூங்கி எழும்போது மனது எழுகின்றது. மனது எழுந்தால் வாசனைகளும் கிளம்புகின்றன. ஆகையால், இந்த மனோ லயத்திலேயே இருக்கமுடியாது. மனதை அடக்கினால் போதாது. அதை நாசமாக்கவும் வேண்டும்.

ஏகாக்கிரகப்பட்ட மனதில் ஆத்ம விசாரம் சுலபமாய் சித்திக்கும். யோக, பக்தி, கர்ம மார்க்க சாதனைகள் மனதை ஏகாக்ரப்படுத்துவதால் பலர் இச்சாதனைகளை கைக்கொண்டு உள்ளனர்.

இதை வைத்தே இந்த நாயகி

'அருணாசலமென அகமே நினைப்பவர்' என்கிறாள். மனது ஏகாக்ரகப்பட வேண்டும் என்பதற்காக எந்தப் பொருளை வேண்டுமானாலும் நினைக்கமுடியாது. ஏனெனில், மீதி சிந்தனைகள் வராமல் இருப்பதற்காக கைக்கொள்ளக்கூடிய

சிந்தனை, மீதி சிந்தனைகளை வர விடாமல் தடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஓரிடத்தில் 'சினிமா நோட்டீஸ்' ஒட்டாதே என்று எவ்வளவு சொல்லியும் ஒட்டுகிறார்கள். அதே இடத்தில் 'நோட்டீஸ் ஒட்டாதே' என்ற நோட்டீஸை ஒட்டினால் மீண்டும் சினிமா நோட்டீஸ் வராது. அது போல், வேறு லௌகீக சிந்தனைகளை வராமலிருக்க அருணாசலேஸ்வரனையோ, குருவையோ நினைக்க வேண்டும்.

எந்த தெய்வத்தை வேண்டுமானாலும் உபாசனை பண்ணலாம் என்று எந்த மகாத்மாவும் சொல்லமாட்டார்கள். 'எல்லாம் பிரும்மம்' என்பது அனுபவத்திலேதான் தவிர விவகாரத்திலில்லை. 'எல்லாம் பிரும்மம்' என்றால் ஒருவன் வீட்டிலுள்ளவர்களையே உபாஸிக்கலாம். அப்படி செய்ய முடியாது. ஏனெனில், அவர்களுக்கு ராக த்வேஷங்கள் உள்ளது. ஆக அனுபவமில்லாதவன் ஒரு பிரும்ம நிஷ்டரையே தேடி குருவாக அடையவேண்டும். அதே போல், தெய்வத்திலும் ப்ரும்ம ஸ்வரூபமான தெய்வத்தையே உபாஸிக்க வேண்டும். அந்த சுவாமிக்கு ராகத்வேஷமோ, பக்ஷ பாதமோ இருக்கக் கூடாது.

இங்கு - 'அருணாசலமென அகமே நினைப்பவர்' - அகம் என்றால் மனசு என்று எடுத்துக்கொண்டு பார்த்தால், இந்த மனதில் அருணாசலத்தை நினைக்கிறவர்' எனலாம்.

அல்லது 'அருணாசலம் என அகமே' - 'அகமே' என்பதற்கு 'நானே' என்று பொருள் கொள்ளலாம். யார் தன்னையே அருணாசலம் என்று நினைத்துக் கொள்கிறவர் எனலாம். இதுதான் அபேத **பா**வம். வேதாந்திகள் இதையே உயர்ந்த **பா**வம் என்கின்றனர். இப்படி 'அருணாசலமென அகமே' என்று நினைப்பதால் அந்த சுவாமியின் சாரூப்யமும், சாயுஜ்யமும் கிடைக்கும்.

'அருணாசலம் என' - அருணாசலத்தை விட ப்ரும்ம ஸ்வரூபம் என்ன இருக்க முடியும்? அப்படித் தானே அருணாசலம் என்று நினைப்பவர்களும் ப்ரும்ம நிஷ்டர்களாக முடியும்! ஒரு ஸ்வாமியை பூஜை பண்ணுகிற ஒருவனின் மனது, இந்திரியங்கள் அந்த ஸ்வாமியிடமே வசப்பட்டு அவர் தியானத்திலேயே இருந்தானென்றால், அந்த சுவாமி சொரூபமாகவே ஆகிறான். க்ருஷ்ணரையே நினைத்து, நினைத்து க்ருஷ்ண ஸ்வரூபமாகிறான். 'க்ருஷ்ண பரமாத்மா' என்கிறோம். வேறு எந்த ஸ்வாமிக்கும் அப்படி சொல்வதில்லை. 'ராம பரமாத்மா' என்பதில்லை. க்ருஷ்ணர் பூர்ண ப்ரும்ம ஸநாதனம். அவர் ப்ரும்ம நிஷ்டர். அவரையே நினைத்து நினைத்து ஒருவன் க்ருஷ்ண ஸ்வரூபமாக, இன்னொரு கிருஷ்ணனாக மாறும் பட்சத்தில், இவனும் ப்ரும்ம நிஷ்டனாகிறான்.

அது போல் யார் 'அருணாசலமே நான்' என்று நினைக்கிறார்களோ அல்லது அருணாசலத்தை மனதில் நினைக்கிறார்களோ- 'அவரகத்தை வேரறுப்பாய் அருணாசலா'- மனோ நாசம் ஏற்படுகிறது. 'அகத்தையே வேரறுப்பாய்' என்றால் ஜீவ பேதத்தையே ஒழித்துக்கட்டுவது என்று அர்த்தம்.

'அருணாசலம் என அகமே' - இப்படி அபேத பாவத்தில் த்யானம் பண்ணி அந்த ஸ்வரூபமாக மாறுவது புரியவில்லை என்பதற்காகவும், நம்மால் முடியவில்லை என்பதற்காகவும் யாராலும் முடியாது என்று சொல்ல முடியாது.

உதாரணமாக, சமீப காலத்தில் வாழ்ந்த ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் ராமரை உபாஸனை செய்து கொண்டிருந்த காலத்தில் தன்னை ஆஞ்சநேயராக பாவித்துக் கொள்வார். தானே ஹநுமத் ஸ்வரூபமாகி விடுவார். அந்த காலத்தில் பாதி நேரம் மரத்தின் மேல்தான் இருப்பார். ஒரு குரங்கிடம்

இருக்கக்கூடிய அத்தனை சேஷ்டைகளும் அவரிடமிருந்தன. ஆச்சரியமாக, அவருக்கு ஒரு குட்டி வால் கூட வந்து விட்டது. அந்த அளவுக்கு அவரிடம் அந்த ஸ்வரூபத்தின் ஐக்கிய மிருந்தது. அதே மாதிரி அவர் கோபியாயிருந்து கிருஷ்ண பக்தி பண்ணுகிற காலத்தில் ஸ்திரீகளுக்கு ஏற்படும் 'பைஷ்டை' கூட அவருக்கு வந்து விட்டது. இந்த **பாவ** சாத்யமே நமக்கு சாத்யமில்லை என்பதால், முடியாது எனலாகாது. இது வரை தத்வார்த்தம். இங்கு,

'அகத்தையே வேரறுப்பாய்' - என்று நாயகி சொல்கிறாள். ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி என இரு வ்யக்திகள் இருக்கலாமே தவிர, சித்தம் ஒன்றாக இருக்க வேண்டும். ஸ்வரூபம் இரண்டாக இருக்கலாம், எண்ணத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது. இதுவே பரிபூரண சரணாகதி தத்துவம். அது மாதிரி தன்னைப் பண்ணச்சொல்லி கேட்கிறாள் நாயகி. இது ஜீவ பேதம் ஒழிந்தால்தான் ஏற்படும். தனக்கு என்று ஒரு சங்கல்பமிருக்கும் வரையில் அகங்காரம் நாசமாகாது. அகங்காரத்தை நாசம் பண்ணும் சாமர்த்தியமில்லை. ஆகையால், சரணாகதி செய்கிறாள். அடுத்ததாக,


*அழகு சுந்தரம் போல் அகமும் நீயுமுற்*
*றபின்னமாயிருப்போ மருணாசலா -3*

-அழகு, சுந்தரம் என்றால் இந்த இடத்தில் ஜீவாத்மா, பரமாத்மா என்று சொல்கிறோம். விவகாரத்தில் சொல்கிறோமே தவிர வாஸ்தவத்தில் அவ்வாறு இல்லை. ஆத்ம சாட்சாத்காரம் என்று கூட ஒன்று இல்லை. ஏனெனில் ஆத்மாவை சாட்சாத்கரிப்பதற்கு கூட அங்கு யாருமில்லை. சைவ உணவு சாப்பிடுகிறவர்களை சைவம் என்கிறோம் - (புலால் உண்ணாதவர்). சிலர் கீரைகள் சாப்பிடுவது சரியா என கேட்பார்கள். நெல் திருப்பி முளைக்கிறதே? தானியம் சாப்பிடலாமா என கேட்பார்கள். உயிர் வாழ்வதற்கு ஏதாவது


உணவு சாப்பிட்டாக வேண்டும் என்பது ஈசுவர நியதி. ஏதாவது உணவு சாப்பிட்டே ஆக வேண்டும் என்ற பட்சத்தில், எந்த ஒரு ஜீவ ஹிம்சையை மிக குறைச்சலாகச் செய்து வாழ முடியுமோ, அந்த ஜீவ ஹிம்சையை செய்தால் பாவமில்லை என அர்த்தம். அது போல் ஆத்மாவும் இல்லை. சாட்சாத்கரிப்பதும் இல்லை. ஏதாவது ஒரு சொல்லை வைத்து பேச வேண்டி இருக்கிறது.

'அழகு' 'சுந்தரம்' இரண்டுக்கும் ஒரே அர்த்தம். எந்த பொருள் மிகவும் ரமணீயமாக இருக்கிறதோ அதற்கு அழகு என்று பெயர். சுந்தரம் என்றும் சொல்கிறோம். வார்த்தைகள் வேறு. அர்த்தம் ஒன்றுதான். இது தமிழ். அது வட மொழி. எப்படி 'அழகு' 'சுந்தரம்' வார்த்தையில் வேறுபட்டு அர்த்தத்தில் ஒன்றாக இருக்கிறதோ அது போல் அருணாசலா, நீயும் நானும் சொரூபத்தில் வேறுபட்டு இருந்தாலும், ஆத்ம சொரூபத்தில் ஒன்றாக இருப்போம். இருப்பது ஒரே ஆத்மாதான். ஜீவனைப் பார்த்துதான் பரமாத்மா என்கிறோம். அதனால் நீ வேறு, நான் வேறு என்று இல்லாமல் 'அபின்னமாயிருப்போம் வா அருணாசலா' - இந்த நாயகி தனக்கும் நாயகனுக்கும், அப்படி ஒரு ஐக்கியத்தை சொல்கிறாள்.

இதில், பகவானின் தாய், தந்தை பெயர்கள் அவருடைய சங்கல்பமில்லாமலே ஆச்சரியாக வந்திருக்கின்றன. 'அழகம்மை' தாயார் பெயர். 'சுந்தரமைய்யர்' தகப்பனார் பெயர். அழகு, சுந்தரம் போல் - இவ்விடத்தில் தனது தாய், தந்தையர்களை ஞாபகப்படுத்தி அவர்கள் போல் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்கிறாள் நாயகி. அவர்கள் ஒற்றுமையாக குடும்பம் நடத்தியதன் பலனே நாம் இன்று ரமண மஹரிஷிகளை பற்றி பேசிக் கொண்டிருப்பது. அவர்கள் குடும்பம் நடத்தா விட்டால் ரமண மஹரிஷிகளே கிடையாது. இது மாதிரி மகாத்மாவை உலகத்துக்கு அவதாரம் பண்ணிக் கொடுத்தார் களில்லையா, அது போல் நாமும் குடும்பம் நடத்துவோம் என்கிறாள் நாயகி.



திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம்
(1960-ல்)



ஸ்ரீ ரமண மஹரிஷி - பால சன்யாசிக்
கோலம் - 21-ம் வயதில்

அடுத்ததாக

*ஆருக்காவெனை யாண்டனை யகற்றிடி*
*லகிலம் பழித்திடு மருணாசலா-4*

பலவிதமாய் தெய்வத்தை அடைபவர்கள் உண்டு. நேற்று வரை சாதாரணமாக இருந்தவர்கள், பகவத் ப்ரேரணையினால் வீட்டை விட்டு கிளம்பி, குகையிலேயே வாழ்ந்து பெரிய மகாத்மாவாகிவிடுவர். தெய்வகதியில் வருகிறவர்களிவர்கள்.

சோகாமோகாதிகளினால் ஏற்படும் துக்கம் தாங்காமல் விரக்தி கதியில் போகிறவர்களும் உண்டு. ஆசார்யாள் சோபான பஞ்சகத்தில் சொல்லுவது போல் வேதத்தைப் படித்து, ஒழுங்காக கர்ம அனுஷ்டானங்களை செய்து, பக்தியை நன்றாக வளர்த்து, அதை கொழுந்துவிட்டு எரியச் செய்து, சத் சங்கத்தில் சேர்ந்து, அதிலிருந்து விலகி ஒரு ஜீவன் முக்தரைத் தேடிப் போய் அவருக்கு கைங்கரியம் செய்து, அவரிடம் மகா வாக்கிய உபதேசம் வாங்கிக்கொண்டு, அவரையும் விட்டு ஏகாந்தத்தில் போய், அவ்வாக்கியங்களை நிதித்யாசனம் பண்ணி ஜீவன் முக்தி ஸ்திதியை அடைகிறவர்களுமுண்டு. இவர்கள் எல்லோரையும் விட அவதார புருஷர்கள் தனி. எல்லா அவதார புருஷர்களும் ஞானிகளே. ஞானிகளெல்லோரும் அவதார புருஷர்களாக மாட்டார்கள். உலகத்தில் மக்களை உய்விப்பதற்காக வரும் அவதார புருஷர்கள் தங்களை அவதாரம் என்று சொல்லிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அது தான் யதார்த்தம். நிறைய பேர் நான் தான் உங்களுக்கு குரு என்பர். முன்னாலிருப் பவருக்கு ஆனால் அப்படி தோன்றாது. யாரையும் பலாத்காரமாக சிஷ்யனாக்க முடியாது. ப்ரேமையினால்தான் சிஷ்யனாக முடியும். பகவான் நான் யாருக்கும் குரு இல்லை என்றார். நாமோ விடாது நீங்களே குரு என்கிறோம்.

எல்லோரைக் காட்டிலும் அவதார புருஷர்களே சிரேஷ்டம். மீதி அனைவருக்கும் மக்களின் அப்போதைய துக்கத்தை நீக்கி சாந்தி கொடுக்கும் சக்தி இருந்தாலும், சாதனை ரஹஸ்யங்களை சொல்லிக் கொடுத்து தன் ஸ்திதிக்கு கொண்டு வரத் தெரியாது. 'ஸ்பரிச வேதி' இரும்பை தங்கமாக்கும். இன்னொரு இரும்பை தங்கமாக்க ஸ்பரிச வேதிதான் தேவை. ஆனால், ஒரு மஹாத்மாவின் அனுக்ரஹத்தினால் உயர்ந்த சிஷ்யனோ, மேலும் பத்து பேருக்கு அனுக்ரஹம் பண்ண முடியும். ஆக, ஸ்பரிச வேதியை விட குருவே உயர்ந்தவர்.

ரமண மஹர்ஷிகள் காரியம் பண்ணவில்லை என்று சொல்வதே தப்பு. அவரை வந்து பார்த்த பல மகாத்மாக்கள் உலகத்தில் காரியம் பண்ணுவதற்கு இவர்தான் காரணம். வள்ளிமலை சுவாமிகள்னு பெரிய மகாத்மா. இன்று திருப்புகழ் ஜீவிக்க இவரே காரணம். அவர் ரமணமஹரிஷிகளின் அத்யந்த சிஷ்யர். இன்று தென்னிந்தியா முழுக்க ஷீரடி சாயி பாபா பக்தியைப் பரப்பியவர் நரசிம்ம ஸ்வாமிஜி. இவர் ரமணரோட பக்தர். இதுமாதிரி அநேக ஆதிகாரிக புருஷர்கள் பகவானின் கிருபையால் உலகில் காரியம் செய்துள்ளனர். அதனால், அவர் காரியம் பண்ணவில்லை என்று சொல்ல முடியாது.

விவேக, வேதாந்த வழியில் வந்தவர்களுக்கு ஏனையோருக்கு சாதனை ரகஸ்யங்களை உபதேசிக்கத் தெரியாது. அவர்கள் ராஜ யோகியாய் இருந்தாகூட யோகத்தில் தான் செய்த சாதனைகள் தெரிந்தாலும், மற்றவருக்கு உபதேசிக்கும் சக்தி இருக்காது. இந்த அவதார புருஷர்களுக்கு மட்டும் தெரியாத விஷயம் உலகத்திலில்லை. மேலும், தெய்வமே எல்லா தெய்வ ரகஸ்யங்களையும் இப்படிப்பட்ட அவதார புருஷர்கள் மூலமாகத்தான் உலகுக்குத் தெரியப் படுத்துகிறது. அதனால் அவதார புருஷர்களே ச்ரேஷ்டம். அப்பேர்ப்பட்ட அவதார புருஷர் இவர். அதனால் தான் அவர்

கிரந்தங்களில் சகல விதமான மார்க்கங்களின் ரகஸ்யங்களும் இருக்கின்றன. பகவானுடைய வசனாம்ருதமோ, 'Day by Day with Bhagavan' என்ற புத்தகத்தை எடுத்துப் பார்த்தால், ஒரு யோகியோ, வேதாந்தியோ, பக்தரோ யார் வந்து எதைக் கேட்டாலும் ஒரு கணத்தில் பதில் சொல்லி இருக்கிறார். பதில்களைப் பார்த்தால், இவருக்கு சகல விதமான சாதனை ரகஸ்யங்களும் தெரிந்திருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட அவதார புருஷர் சரணத்தில் விழுந்தால் போதும். பகவான் எனக்கு கிருபை பண்ணவில்லையே என்று பலர் அவரிடம் கேட்டிருக்கிறார்கள். நான் கிருபை பண்ண வில்லை என்றால், நீ இங்கு வர முடியுமா என்று சொல்லி இருக்கார். உனக்கு இந்த ஜன்மத்துல மோக்ஷம் இல்லை யென்றால், இங்கு வர முடியுமா என்று கேட்டிருக்கார். அப்ப அவரோட சங்கத்துல சேர்ந்ததே போதும், நாம் மோக்ஷத்துக்கு போய் விடுவோம்.

(தொடரும்)

தொகுப்பு : **ஸ்ரீ முரளீதர தாஸன்**

---

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'- ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் (இரண்டு பாகங்கள்) விலைக்குக் கிடைக்கும். 10 கேஸட்டுகள் கொண்ட ஒவ்வொரு பாகமும் ரூ. 200/- V.P.P.யில் அனுப்ப ஒவ்வொரு பாகத்திற்கும் ரூ.50/- கூடுதல் .

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-**

எஸ். பாலகிருஷ்ணன், ✆ PP. 4896264
36/14, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# செய்திகள்

### ஜூன் 14-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை

சென்னை ***பெரம்பூரில்*** உள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் - ***'பக்த விஜயம்'*** - ஸ்ரீ குருஜியின் ப்ரவசனம் நடைபெற்றது.

### ஜூன் 25-ந் தேதி முதல் ஜூலை 1-ந் தேதி வரை

சென்னை மயிலாப்பூர் கேசவப் பெருமாள் கோயல் தெரு ***'பக்தர்கள் சேவா அறக்கட்டளை'*** சார்பில் காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாள் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ குருஜியின் ***'பக்த விஜயம்'*** உபன்யாஸம் நடைபெற்று முடிந்தது.

### ஜூன் 29-ந் தேதி - வைகாசி அனுஷம்

மாதாந்திர 'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்' சென்னை பிரேமிக பவனில் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஆகஸ்ட் 4-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை

சென்னை மயிலாப்பூர் ***ஆர்.ஆர். சபாவில்*** பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ***'அக்ஷர மண மாலை'*** மூன்றாம் பாகம் - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம்.

### ஆகஸ்ட் 22-ந் தேதி - *அனுஷ நக்ஷத்ரம்*

மாதாந்திர 'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்' - ப்ரேமிக பவனில் நடைபெறும்.

### செப்டம்பர் 4-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை

ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் - 3-வது பத்து நாள் 'ப்ரம்மோத்ஸவம்' ஆரம்பம்.

**மங்களானி பவந்து**

மதுரமுரளி
Registered as Newspaper in India

R. No. 62828/95
Single Copy Rs. 5/-

Regd. No. TN/MS/(S)/714
Annual Subs. Rs. 60/-

வேணு : 2 | ஆகஸ்டு 1996 | கானம் : 1



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras - 600 014. Editor : S. Sridhar